ORIGINAL ARTICLE

# தேசியப்பள்ளித் தமிழாசிரியர்களின் கற்பித்தலில் உயர்நிலைச் சிந்தனையைத் தூண்ட உதவும் அணுகுமுறைகள்

# [TĒCIYAPPAḶḶIT TAMIḺĀCIRIYARKAḶIṈ KAṞPITTALIL UYARNILAIC CINTAṈAIYAIT TŪṆṬA UTAVUM AṆUKUMUṞAIKAḶ]

# HIGHER ORDER THINKING SKILLS APPROACHES IN TEACHING OF TAMIL AS A SECOND LANGUAGE IN NATIONAL SCHOOL

**சத்தியராஜ் முனியாண்டி / Sathiaraj Muniandy *[1]**
**தமிழ்மணி சுப்ரமணியம் / Thamilmani Subramaniam [2]**
**சரவணன் அண்ணாமலை / Saravanan Annamaili [3]**

[1] Cator Avenue National School, Ipoh, Perak, Malaysia. Email: rajboy84@yahoo.com.my
[2] Sungai Tok Pawang Tamil Primary School, Kedah, Malaysia. Email: thamil1308@gmail.com
[3] St Mark Nationla School, Butterwort, Malaysia. Email: saravanan@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/196

**Abstract**

Tamil language teachers in national school are implementing the Higher Order Thinking Skills (HOTS) through teaching and learning activities. Involvement of pupils are significant using the various methods and strategic during the lessons. Methods and strategic highlighting Higher Order Thinking Skills are incorporated through communication, collaboration, creativity, research thinking and ethics. The activities such as hot seat, gallery walk, round table are described with evidence are tailored to suit the Higher Order Thinking Skills of the pupils in their respective classes. The implementation of 21-century teaching and learning approaches unable pupils to fully participate in all activities especially in promoting the Higher Order Thinking Skills in classroom.

**Keywords:** National school Tamil Language Teachers, teaching and learning strategic, Higher Order Thinking Skills.

**ஆய்வுச் சாரம்**

தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் தங்கள் கற்றல் கற்பித்தலின் வழி உயர்நிலைச் சிந்தனையைப் பள்ளி பருவத்திலேயே மாணவர்கள் தங்களுள் வளர்த்துக் கொள்ள துணைபுரிகின்றனர்.

உயர்நிலைச் சிந்தனையானது மாணவர்கள் ஈடுபடவிருக்கும் ஒவ்வொரு துறையின் நுணுக்கங்களை நன்கு ஆராய்ந்து பின் அதில் ஈடுபட்டு வெற்றி காண உதவி புரிகிறது. மாணவர்கள் தங்களுள் உயர்நிலைச் சிந்தனையை வளர்த்துக் கொள்ளும் வகையில் தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் தொடர்பாடல், கூட்டுறவு, படைப்பாற்றல், ஆய்வுச்சிந்தனை, நன்னெறிப்பண்பு போன்ற அணுகுமுறைகள் கையாளப்படுவதை குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் தொடர்பான சில நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஹாட் சீட் (hot seat), கெளரி வாக் ( gallery walk), வட்ட மேசை (round table) போன்ற புதிய சிந்தனைகள் தக்க சான்றுகளோடு விவரிக்கப்பட்டுள்ளன. தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் தங்களின் அணுகுமுறையை 21ஆம் நூற்றாண்டின் திறன்களுக்கு ஏற்ப வடிவமைத்து விளைபயன்மிக்க கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் மாணவர்கள் முழுமையாகப் பங்கேற்க வாய்ப்பளிக்கின்றனர்.

**கருச்சொற்கள்:** தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள், கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள், உயர்நிலைச் சிந்தனை.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 15th Dicember 2021, revised 10th January 2022, accepted 27th January 2022

**முன்னுரை**

உலக நவீனமய மாற்றத்திற்கு ஏற்ப மலேசியக் கல்விக் கொள்கையிலும் அவ்வப்போது மாற்றங்கள் ஏற்படுகின்றன. பள்ளி பருவத்திலேயே மாணவர்களிடம் உயர்நிலைச் சிந்தனையை வளர்க்க வேண்டும் என்பது கல்வி அமைச்சின் திட்டமாகும். இதனடிப்படையில் மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டம் (2013-2025), செப்டம்பர் 6ஆம் திகதி 2011 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வழி, அறிவு சார்ந்த மாணவர்களை மேம்படுத்தவும், உலக நாடுகளோடு போட்டி ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்கும் வண்ணம் கல்விக் கொள்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. இம்மாற்றத்தில், உயர்நிலைச் சிந்தனைத் திறன் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, மாணவர்களின் கற்றலில் மாற்றத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும் வண்ணம் வரையறுக்கப்பட்டுள்ளன (மலேசியக் கல்வி அமைச்சு, 2013)[1].

உயர்நிலைச் சிந்தனையானது மாணவர்கள் ஈடுபடவிருக்கும் ஒவ்வொரு துறையின் நுணுக்கங்களை நன்கு ஆராய்ந்து பின் அதில் ஈடுபட்டு வெற்றி காண உதவி புரிகிறது (இராஜேந்திரன், 2008)[2]. உயர்நிலைச் சிந்தனையைப் பள்ளி பருவத்திலேயே மாணவர்கள் தங்களுள் வளர்த்துக் கொள்ள ஆசிரியர்கள் துணைபுரிய வேண்டும் (ஜேன், 2011)[3]. மாணவர்கள் தங்களுள் உயர்நிலைச் சிந்தனையை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் அமைய வேண்டும் (அஜிஜி, 2021)[4].

உயர்நிலைச் சிந்தனைத் திறன் அமலாக்கத்தில் பாடத்திட்டம், கற்றல் கற்பித்தல் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு என மூன்று முக்கிய அம்சங்களை மலேசியக் கல்வி அமைச்சு வரையறுத்துள்ளது. உயர்நிலைச் சிந்தனைத் திறன் அமலாக்கத்தில் ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாததாகக் கருதப்படுவதால், அவர்களுக்குத் தேவையான கையேடுகளை

வெளியிட்டு, அமலாக்கம் தொடர்பான பயிற்சிகளையும் ஆசிரியர்களுக்கு அவ்வப்போது மாநிலக் கல்வி இலாகாவின் மூலம் கல்வி அமைச்சு வழங்கி வந்துள்ளது. இதன் அடிப்படையில் கல்வி அமைச்சின் கொள்கைக்கேற்ப ஆசிரியர்கள், உயர்நிலைச் சிந்தனைத் தொடர்பான தகவல்களையும், அமலாக்க ஆற்றலையும், பயன்படுத்தும் உத்திகளையும் அறிந்திருக்க வேண்டும் (மலேசியத் தேர்வு வாரியம், 2013)[5]. மேலும், விளைப் பயன்மிக்க கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்ட, அவர்களை மையப்படுத்திய விளைப் பயன்மிக்க பலதரப்பட்ட நடவடிக்கைககளைக் கையாளும் பன்முகத்தன்மை மிக்கவர்களாக ஆசிரியர்கள் தங்களை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது (நோர்அஸ்மலிசா, 2016)[6]. மேற்கூறிய அம்சங்களுக்கேற்ப, தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் உயர்நிலைச் சிந்தனைத் திறனைத் தூண்ட உதவும் பல்வேறு அணுகுமுறைகளைத் தங்களின் கற்பித்தலில் கையாளுகின்றனர்.

## ஆய்வின் நோக்கங்கள்

தேசியப்பள்ளித் தமிழாசிரியர்களின் கற்பித்தலில் உயர்நிலைச் சிந்தனைத் திறனைத் தூண்ட உதவும் அணுகுமுறைகளை ஆராயும் இவ்வாய்வானது கீழ்காணும் நோக்கங்களைக் கொண்டுள்ளது:

i. தேசியப்பள்ளித் தமிழாசிரியர்களின் உயர்நிலைச் சிந்தனைத் தொடர்பான ஆசிரியர்களின் முன்னறிவை ஆராய்தல்,
ii. தேசியப்பள்ளித் தமிழாசிரியர்களின் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் உயர்நிலைச் சிந்தனைத் திறன் அமலாக்கத்தை ஆராய்தல்.
iii. தேசியப்பள்ளித் தமிழாசிரியர்களின் கற்பித்தலில் உயர்நிலைச் சிந்தனைத் திறனைத் தூண்ட உதவும் அணுகுமுறைகளை ஆராய்தல்.

## ஆய்வின் முறை

இவ்வாய்வில் பயன்படுத்தப்படும் தரவுகள் மலேசியக்கல்வி அமைச்சின் அதிகாரப்பூர்வ ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டது. இதற்கிடையில் சில தரவுகள் தேசியப்பள்ளி தமிழாசிரியர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்கள் மூலம் கிடைக்கப்பெற்றன. மேலும், சில தேசியப்பள்ளித் தமிழாசிரியர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கப்பட்டும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## ஆய்வின் வரையறை

தேசியப்பள்ளிகளில் தமிழ்மொழியின் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளை அடையாளம் காண இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. எனவே, தமிழ்மொழியை விருப்ப பாடமாகக் கொண்டுள்ள, தேசியப்பள்ளிகள் மட்டுமே இவ்வாய்வின் வரையறையாக நிர்ணயிக்கப்படுகின்றன.

**தேசியப்பள்ளித் தமிழாசிரியர்களின் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

அணுகுமுறை என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்கு முறையாக அணுகுவது அல்லது நெருங்குவது என்று பொருள்படும் (எஸ்லி, 1972)[7]. அவ்வகையில் தேசியப்பள்ளித் தமிழாசிரியர்களின் கற்றல் கற்பித்தலில் பல்வேறு அணுகுமுறைகளைக் கையாளுகின்றனர். இருபத்தோராம் நூற்றாண்டின் காலவோட்டத்திற்கேற்ப, இணைந்து கற்றல், கூடிக்கற்றல், நாடிக்கற்றல், திறம்படக்கற்றல், கட்டுருவாக்க முறைமை ஆகிய அணுகுமுறைகளையும் தங்களின் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் கையாளுகின்றனர் (முனியாண்டி மற்றும் நாராயணசாமி, 2015)[8]. மேலும், கதை முறை, நாடக முறை, குழு முறை, விளக்க முறை, தகவல் தொழில்நுட்ப முறை, கலந்துரையாடல்முறை, வாய்விட்டு வாசிப்பு முறை, உய்த்துணர் வெளிப்பாடு முறை ஆகிய அணுகுமுறைகளைக் கையாளுகின்றனர் (பொன்னுதுரைராஜ், 2014)[9]. இவ்வணுகுமுறைகள் யாவும் தேசியப்பள்ளித் தமிழாசிரியர்களின் விளைபயன்மிக்க கற்றல் கற்பித்தலை உருவாக்க உதவுகின்றன.

**தேசியப்பள்ளித் தமிழாசிரியர்களின் கற்பித்தலில் உயர்நிலைச் சிந்தனைத் திறனைத் தூண்ட உதவும் அணுகுமுறைகள்**

**தொடர்பாடல்**

இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் கூறுகளில் ஒன்று தொடர்பாடல் ஆகும். இக்கூற்றை உயர்நிலைச் சிந்தனைத் திறனைத் தூண்டும் பொருட்டு, தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் பல்வேறு வகையான அணுகுமுறைகளைத் தங்களின் கற்பித்தலில் உட்புகுத்துகின்றனர். குறிப்பாக விளம்பரம் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்(2.4.1) (தமிழ்மொழிக் கலைத்திட்டத் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம், 2017)[10] என்ற கற்றல் தரத்திற்கான கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் தொடர்பாடல் திறனைப் பல்வகையாக அணுகுமுறையில் உட்புகுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக, ஆசிரியர், மாணவர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து விளம்பரங்கள் சிலவற்றை வலையொளியின் துணையுடன் தேடி அவற்றைத் தங்களின் சுய குரலில் ஒலிப்பதிவு செய்ய பணிக்கின்றனர். இதன்மூலம், மாணவர்கள் விளம்பரங்களை உற்றுநோக்கி அதன் தன்மைகளை அறிவர். ஒலிப்பதிவு செய்யப்பட்ட விளம்பரத்தை மாணவர்கள் கேட்டு, பின் குழு உறுப்பினர்களுடன் தொடர்பாடலில் ஈடுபட்டு ஆசிரியர் கேட்கும் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கின்றனர். இந்நடவடிக்கைகளின் மூலம், மாணவர்கள் சுயமாக அறிவை நாடி பெற்று, தொடர்பாடலின்மூலம் சரியான முடிவை எடுத்து உயர்நிலைச் சிந்தனைத் திறனைப் பெறுகின்றனர்.

**கூட்டுறவு**

இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தலில் அடுத்த கூறு கூட்டுறவாகும். தேசியப்பள்ளி நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு, குழலுக்கேற்ற கருத்துகளை 30 சொற்களில் கோவையாக எழுதுவர்(3.4.6) என்ற கற்றல் தரத்திற்கான கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர், உயர்நிலைச் சிந்தனைத் திறனைத் தூண்டும் பொருட்டு கூட்டுறவுத் திறனைப் பயன்படுத்துகின்றனர். அச்சிடப்பட்ட படங்களின் மூலம் ஆசிரியர்கள் குழு முறையில் மாணவர்களை ஒரு சூழலை உருவாக்கச் செய்கின்றனர். அதன்பின், ஒவ்வொரு குழுவிற்கும்

குறிப்பிட்ட நேரத்தை வழங்கி, குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடி சூழலுக்கேற்ற கருத்துகளை மாணவர்களை எழுதச் செய்கின்றனர். இதன்மூலம், மாணவர்கள் குழு வடிவ கூட்டுறவின் மூலம் பாடநோக்கத்தை அடைவர். மாணவர்களே சூழலை நாடிச் சென்று, அதை கையாளுவதால் அவர்களிடையே கூட்டுறவு மேம்பட்டு இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் முழுமையடைகிறது, உயர்நிலைச் சிந்தனைத் திறனும் மேம்படுகின்றது.

**படைப்பாற்றல்**

இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் கூறுகளில் ஒன்று படைபாற்றலாகும். இக்கூற்றை தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் பல்வேறு அணுகுமுறையில் கையாளுகின்றனர். தேசியப்பள்ளி ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்குத், தொடர்படத்தையொட்டி வாக்கியம் அமைப்பர்(3.3.20) என்ற கற்றல் தரத்திற்கான கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர் மிக சிறப்பான முறையில் மாணவர்களின் படைப்பாற்றலைத் தூண்டுகின்றனர். எடுத்துக்காட்டாக, மடிக்கணினியின்மூலம், மாணவர்களைத் தங்களுக்குப் பிடித்த தொடர்படத்தைத் தேடச் செய்கின்றனர். பின், ஆசிரியர் அத்தொடர்படத்திற்கேற்ற தலைப்பை மாணவர்களுக்கு வழங்குவார். தலைப்பையொட்டி வாக்கியங்கள் அமைக்க, சிறந்த படைப்பாற்றலுடன் எழுதப்படும் வாக்கியங்களுக்கு ஆசிரியர் பரிசு வழங்கி போட்டிகளில் இடம்பெற வகைச்செய்கின்றனர். இதன்மூலம், மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறன் கொண்டவர்களாக மட்டும் உருவாக்குவதோடு நின்றுவிடாமல், அதை வெளிக்கொணர்ந்து படைத்து, படைப்பாற்றல் மிக்கவர்களாகவும் செதுக்கி இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றலை நிறைவுச் செய்கின்றனர்.

**ஆய்வுச்சிந்தனை**

இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தலில் மிக முக்கிய கூறாகத் திகழ்வது ஆய்வுச் சிந்தனையாகும். தேசியப்பள்ளி ஆறாம் ஆண்டு மாணவர்கள் குறிவரைவை வாசித்துப் புரிந்து கொள்வர்(2.4.13) என்ற கற்றல் தரத்திற்கான கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர், மாணவர்களின் ஆய்வுச் சிந்தனையை வளர்க்க பல்வேறு நடவடிக்கைகளைக் கையாளுகின்றனர். எடுத்துக்காட்டாக, பல்லூடகப் படைப்பைக்கொண்டு ஆசிரியர் குறிவரைவு ஒன்றனை மாணவர்களுக்குக் காண்பிக்கின்றார். குறிவரைவிலிருந்து தகவலைப் பெறும் முறையை மாணவர்களே சுயமாக ஆசிரியர் வழங்கிய விளக்க அட்டைகளின் மூலம் பெருகின்றனர். பின், தாங்கள் கற்ற அறிவைக்கொண்டு குறிவரைவைப் புரிந்து கொண்டு, அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பகுத்தாய்ந்து ஆய்வின் அடிப்படையில் காரணங்களை முன் வைக்கின்றனர். இதைத் தவிர, தற்போது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நிகழும் சம்பவங்களையும் தங்களுக்குத் தெரிந்த இதர அனுபவங்களையும் கருத்துகளையும் தொடர்புபடுத்தி கலந்துரையாடுகின்றனர். இத்தகைய ஆக்கப்பூர்வமாகத் தொடர்புபடுத்தும் சிந்தனையைக் கேள்விகளின் வழி ஆசிரியர் விதைக்கின்றார். இந்நடவடிக்கைகளின் மூலம், மாணவர்கள் சுயமாக குறிவரைவுத் தொடர்பான அறிவைப் பெறுவதோடு, ஆய்வுச்சிந்தனையையும் வலுப்படுத்தி, உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்தி, இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் திறனை அடைகின்றனர்.

**நன்னெறிப்பண்பு**

இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தலில் கல்வி அமைச்சு பரிந்துரைக்கும் கூறுகளில் ஒன்று நன்னெறிப்பண்பாகும். மாணவர்கள் அடையவேண்டிய அடிப்படை கூறான நன்னெறிப்பண்பை, தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் மிக இலாவகமாகக் கையாளுகின்றனர். தேசியப்பள்ளி மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்குக் கதை தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்(2.4.3) என்ற கற்றல் தரத்திற்கான கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர் நன்னெறிமிக்க கதையைப் பயிற்றுத்துணைப்பொருளாகக் கையாளுகின்றனர். எடுத்துக்காட்டாக, பாடவேளைக்கு முதல்நாள், ஆசிரியர் மாணவர்கள் அனைவரையும் வீட்டில் ஒரு கதையைத் தேடிவரப் பணிக்கச் செய்கின்றார். மாணவர்களே சுயமாக முயற்சித்து கதையைக் கண்டெடுத்து வருகின்றனர். ஆசிரியர் அக்கதைகளிலுள்ள நன்னெறிப்பண்புகளை மாணவர்களை அடையாளங்காணச் செய்கின்றார். தொடர்ந்து, இத்தகைய சூழலில் நீங்கள் என்ன செய்வீர்கள் போன்ற வினாக்களை எழுப்பி, மாணவர்களைச் சூழலுக்கேற்ப துலங்கச் செய்கின்றார். பின், அதை பின்பற்ற அறிவுரை வழங்குகின்றார். இந்நடவடிக்கையின்மூலம், மாணவர்கள் கதை தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பதோடு மட்டுமில்லாமல், அவர்களின் மனதில் நன்னெறிப்பண்பும் விதைக்கப்பட்டு உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்தி, இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் திறனை அடைகின்றனர்

**உயர்நிலைச் சிந்தனைத் திறன் சார்ந்த கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள்**

**ஹாட் சீட் (hot seat)**

தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஒன்றாக விளங்கும் 'ஹாட் சீட்' நடவடிக்கையை அதில் உட்புகுத்துகின்றனர். தேசியப்பள்ளி இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான அறுசுவைப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்தி பேசுவர்(1.3.4) என்ற கற்றல் தரத்திற்கான கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர் 'ஹாட் சீட்' நடவடிக்கையை வகுப்பில் மேற்கொள்கின்றார். எடுத்துக்காட்டாக, பாடவேளைக்கு முதல் நாள், ஆசிரியர் மாணவர்களுக்கு அங்குள்ள 'அறுசுவை' தொடர்பான விளக்கங்கள் அடங்கிய தாள்களை வழங்கி, அதை முழுமையாகப் படித்து வரச் செய்கின்றனர். மறுநாள் அனைவரிடமும் அது தொடர்பான கேள்விகள் கேட்கப்படும் என கூறுகின்றனர். பாடவேளையின்போது, ஆசிரியர் ஒரு மாணவரைத் தேர்ந்தெடுத்து 'ஹாட் சீட்' என அழைக்கப்படும் இருக்கையில் அமரப் பணிக்கின்றார். மற்ற மாணவர்கள் 'அறுசுவை' தொடர்பாகக் கேட்கும் கேள்விகளுக்கு 'ஹாட் சீட்' இருக்கையில் அமர்ந்திருக்கும் மாணவர் பதிலளிக்கிறார். இந்நடவடிக்கையின்மூலம், மாணவர்கள் சுயமாக, சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்ளுதல், நண்பரின் பதிலைச் சரிப்பார்த்தல் போன்ற உயர்நிலைச் சிந்தனைத் திறன்களைப் பெறுவர்.

**கௌரி வாக் (gallery walk)**

இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையான 'கௌரி வாக்' நடவடிக்கையையும் தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் உட்புகுதுகின்றனர். தேசியப்பள்ளி இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்றொடர்கள்

அடங்கிய வாக்கியம் அமைப்பர்(3.3.5) என்ற கற்றல் தரத்திற்கான கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் 'கௌரி வாக்' நடவடிக்கையைக் கையாளுகின்றனர். எடுத்துக்காட்டாக, ஆசிரியர்கள் மாணவர்களைக் குழுவாரியாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் ஓர் உயிர்மெய் எழுத்தைக் கொடுத்து, அதைக் கொண்ட சொற்றொடர்கள் அடங்கிய வாக்கியத்தை உருவாக்கப் பணிக்கின்றனர். உருவாக்கிய வாக்கியங்களை வெண்தாளில் 'i-think' வரைப்படத்தின் மூலம் படைக்கச் செய்கின்றனர். பின், சுவற்றில் அதனை ஒட்டி, மாணவர்கள் மற்ற குழு படைப்பையும் படித்து, உற்றுநோக்கி, தங்களின் கருத்துகளை வழங்க வேண்டும். இந்நடவடிக்கையின்வழி, மாணவர்கள் ஆய்வுச் சிந்தனையோடு சிந்தித்தல், மற்றவர்களின் கருத்தை மதித்தல், குழு ஒற்றுமையை வளர்த்தல் ஆகிய திறன்களைப் பெறுவர்.

**வட்ட மேசை (round table)**

தொடர்ந்து, ஆசிரியர்கள் வட்ட மேசை நடவடிக்கையின்வழி, உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்துகின்றனர். தேசியப்பள்ளி ஆறாம் ஆண்டு மாணவர்களுக்குக், கேள்விகளுக்கு விளக்கமாகவும் தெளிவாகவும் வாக்கியத்தில் பதில் கூறுவர்(1.4.8) என்ற கற்றல் தரத்திற்கான கற்றல் கற்பித்தலை வட்ட மேசை நடவடிக்கையின்வழி மேற்கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக, பலதரபட்ட கேள்விகளை மாணவர்களிடம் முன்வைக்கும் ஆசிரியர்கள், அக்கேள்விகளுக்கு வட்ட மேசையில் மாணவர்கள் குழுவாக அமர்ந்து தங்களின் கருத்துகளைப் பதிவுச் செய்யுமாறு செய்கின்றனர். இந்நடவடிக்கையில் மாணவர்கள் நண்பர்களின் கருத்துகளையும் அறிவையும் தானே சுயமாக மதிப்பிட்டு, உயர்நிலைச் சிந்தனைத் திறனை மேம்படுத்தி, இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் திறனை அடைகின்றனர்.

**முடிவுரை**

தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் உயர்நிலைச் சிந்தனைகளைத் தூண்ட பற்பல அணுகுமுறைகளை வெளிக்கொணர்வது இவ்வாய்வின் வழி புலனாகிறது. தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் முழுமையாக உயர்நிலைச் சிந்தனைத் திறன் தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்ளும் ஆர்வம் உள்ளவர்களாகவும் அதன் தொடர்பான சிந்தனையாற்றல் மிக்கவர்களாகவும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் மேலோங்கச் செய்வதில் கைத்தேர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். மேலும், மாணவர்களின் சிந்தனை ஆற்றலை மேலோங்கச் செய்ய, தேசியப்பள்ளித் தமிழாசிரியர்கள் தங்களின் அணுகுமுறையை 21ஆம் நூற்றாண்டின் திறன்களுக்கு ஏற்ப வடிவமைத்து விளைபயன்மிக்க கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் மாணவர்கள் முழுமையாகப் பங்கேற்க வாய்ப்பளிக்கின்றனர்.

**மேற்கோள் நூல்கள்:**

1. Kementerian Pendidikan Malaysia. (2013). *Pelan Pembangunan Pendidikan Malaysia 2013- 2025*. Putrajaya: Kementerian Pendidikan Malaysia.
2. Rajendran, N. S. (2008). *Literature as a medium in teaching higher order thinking skills.* National Research Proceeding Seminar and Development in Education 2000, Teacher Education Devision, Ministry of Education Malaysia (Kesusasteraan sebagai wahana mengajar Kemahiran Berfikir Aras Tinggi. Prosiding Seminar Kebangsaan Penyelidikan

dan Pembangunan dalam Pendidikan 2000, Bahagian Pendidikan Guru, Kementerian Pendidikan Malaysia). *http://nsrajendran.tripod.com/Papers/sasteraHOTskills.pdf*.

3. Jane, P. (2011). *Creativity for 21st Century Skills: How to Embed Creativity into the Curriculum*, Rotterdam: Sense Publisher.
4. Azizi, S. (2021). Sikap dan Kesediaan Pelajar Tingkatan Empat Terhadap Perlaksanaan Kemahiran Berfikir Aras Tinggi dalam Pembelajaran Matematik. *Malaysian Journal of Social Sciences and Humanities (MJSSH) 6(*3). Universiti Kebangsaan Malaysia.
5. Lembaga Peperiksaan Malaysia. (2013). *Elemen kemahiran berfikir aras tinggi (KBAT) dalam instrumen pentaksiran.* Putrajaya: Kementerian Pendidikan Malaysia.
6. Nor Hasmaliza Hassan. (2016). Persepsi guru Bahasa Melayu sekolah menengah terhadap kemahiran berfikir aras tinggi. *Jurnal pendidikan Bahasa Melayu, 6*(2), 78-90.
7. Hesly, S. (1972). *Challenging questions in the literature classroom*. New York: Longman Green and Company.
8. Muniyandy, V., & Narayanasamy, S. (2015). Teaching and Learning of Higher-Order Thinking Skills (HOTS) in Secondary Schools: A Review of Teachers Knowledge HOTS and Their Implementation. *National Education Research Seminar, 2015. SPPK2015/037*, 352-360.
9. Ponnuduraj, M. (2014). *Pelaksanaan pendekatan konstruktivisme dalam proses pengajaran Bahasa tamil di sekolah menengah daerah Kuala Muda Negeri Kedah*. Jabatan Pengajian India Fakulti Sastera dan Sains Sosial. Universiti Malaya: Kuala Lumpur, Malaysia.
10. Kementerian Pendidikan Malaysia (2017). *Dokumen Standard Kurikulum Dan Pentaksiran Bahasa Tamil*. Putrajaya: Kementerian Pendidikan Malaysia.